# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).**

முறையீட்டு மனு எண்: 033/மா/2019

ஆணை நாள்: 04/03/2019

திரு. J. வேலாயுதம்,
கவுந்தம்பாடி,
ஈரோடு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
சூரமங்கலம் வார்டு,
சேலம் மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

ஈரோடு மாநகராட்சி, கவுந்தம்பாடி, போஸ் தெரு, எண்.28, என்ற முகவரியில் வசிக்கும் திரு. J. வேலாயுதம் என்பவரது 14.08.2018 நாளிட்ட முறையீட்டு மனு 20.8.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.33/2019 என எண்ணிடப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு, மனுதாரரின் கோரிக்கை மற்றும் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

திரு. J. வேலாயுதம், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தனது பெரியப்பா திரு. சச்சிதாநந்தம் பிள்ளை, அவரது மனைவி திருமதி. லட்சுமி அம்மாள் என்பவருடன் சேலம், அரிசி பாளையம், R D பால் தெரு கதவு எண்.178 என்ற முகவரியில் தனக்கு சொந்தமான வீட்டில் வசித்து வந்தார் என்றும், திரு. சச்சிதானந்தம் பிள்ளை 1989-ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும், அவரது மனைவி திருமதி லட்சுமி அம்மாள் 2016–ஆம் ஆண்டு இறந்து விட்டார் என்றும், அவர்களுக்கு குழந்தைகள் இல்லை என்றும், திரு. சச்சிதானந்தம் பிள்ளை என்பவருடைய தம்பி ஜெகநாதன்

மகனாகிய தான் தான் சட்டப்படியான வாரிசு என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்கண்ட வீட்டின் சொத்துவரி விதிப்பு எண்.1034822, தற்பொழுது திரு. இளங்கோவன் என்பவரது பெயரில் 2010-ஆம் ஆண்டு முதல் உள்ளதாகவும், சேலம் நகராட்சியாக இருந்த காலத்தில் இருந்தே இளங்கோவன் என்பவர் பெயரில் உள்ளதாக சூரமங்கலம் வார்டு அலுவலகத்தில் தெரிவிப்பதாகவும், திரு. இளங்கோவன் என்பவர் பெயரில் சூரமங்கலம் வார்டு அலுவலகத்தில் மோசடி வேலைகள் செய்து பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், போலியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள இளங்கோவன் பெயரை நீக்கம் செய்து காலம் சென்ற திருமதி. லட்சுமி அம்மாள் பெயரில் வரி விதிப்பு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க ஈரோடு மாநகராட்சியின் சூரமங்கலம் வார்டு அலுவலக உதவி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 19.9.2018 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது.

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலக உதவி ஆணையர் தனது 4.10.2018 நாளிட்ட அறிக்கையில் சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண்.26, கதவு எண்.178 சொத்துவரி விதிப்பு எண்.1034822 என்பது சேலம் நகராட்சியிலிருந்து மாநகராட்சியாவதற்கு முன்பிருந்த கால சொத்துவரி பதிவேட்டின்படி திரு. இளங்கோவன் பெயரிலேயே உள்ளது என 50க்கும் மேற்பட்ட கடிதங்கள் வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது என்றும், தனியர் மாண்பமை நடுவர் முறைமன்றத்தில் முறையிட்டு, அதன் அடிப்படையில் 14.12.2017-ல் விசாரணைக்கு ஆஜராக அழைத்திருந்தும் திரு. J. வேலாயுதம் என்பவர் மாண்பமை முறைமன்ற நடுவம் முன்னிலையில் ஆஜராகவில்லை என்றும், தனியர் தகவல் ஆணையத்திலும் இப்பொருள் குறித்து ஆஜராகவில்லை என்றும், முறையான ஆவணங்களை கொண்டு அலுவலகத்தில் சமர்ப்பித்து சொத்து வரியினை பெயர் மாற்றம் செய்து கொள்ள தெரிவித்து பல கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என்றும், நாளது தேதிவரையில் பதிவேட்டில் சொத்துவரி விதிப்பு எண்.1034822 இளங்கோவன் பெயரிலேயே உள்ளது என்றும், திரு. J. வேலாயுதம் என்பவர் காலம் சென்ற திருமதி. லட்சுமி அம்மாள் என்பவரது உறவினர் என தெரிவித்துக்கொண்டு மேற்படி சொத்தில் உரிமை கோர தற்பொழுது லட்சுமி அம்மாள் வீட்டினை பராமரிப்பில் உள்ளவரிடம் உரிமை கோரி குடும்பம் மற்றும் சொத்து பிரச்சனை இருந்து வருவது அருகில் உள்ளவர்களிடம் விசாரணையில் தெரிய வருகிறது என்றும், மேற்படி கட்டிடங்களின் பராமரிப்பில் உள்ளவரிடம் விசாரணைக்கு சென்ற போது எவ்வித தகவலும் தர மறுக்கிறார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் திரு. J. வேலாயுதம் என்பவர் ஒய்வு பெற்ற நகராட்சி பணியாளர்

என்றும், இவர் மேற்படி காலம் சென்ற லட்சுமியம்மாள் என்பவரது சொத்து தாவா சம்மந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தை நாடாமல் தொடர்ந்து மாநகராட்சிக்கு மனுக்கள் அனுப்பி வருகிறார் என்றும் உரிய ஆவணங்களை தனியர் வழங்கினால் அதன் அடிப்படையில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்து தரப்படும் என்பதை சுமார் 50 கடிதங்களுக்கு மேல் பதில் அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 07.11.2018 மற்றும் 29.01.2019 நாளிட்ட அழைப்பாணைகளின்படி முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவுள்ள விசாரணையில் ஆஜராகி தனது வாக்கு மூலத்தினையும் மற்றும் காலம் சென்ற திருமதி லட்சுமி அம்மாள் அவர்களின் இறப்பு சான்றிதழ் திருமதி லட்சுமி அம்மாள் அவர்கள் வாரிசுதாரர்கள் பற்றிய சான்றிதழ் மற்றும் 21.05.2015 நாளிட்ட கிரயப் பத்திர ஆவண எண்.1026/2015 ஆகிய ஆவணங்களை விசாரணையின் போது சமர்ப்பிக்க அறிவுறுத்தி ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவும் இல்லை, ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கவும் இல்லை.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகமலும், ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்காமலும் இருந்து வருவது, மனுதாரர் தனது கோரிக்கை சம்பந்தமாக அளிப்பதற்கான விளக்கமோ ஆவணங்களோ ஏதும் இல்லை என கருதி இம்முறையீட்டு மனு மீதான தொடர் நடவடிக்கையினை கைவிடலாம் எனவும், முறையீட்டு மனுதாரர் பெயர் மாற்றம் செய்வதற்கான உரிய ஆவணங்களை வழங்கும் பட்சத்தில் உரிய விதி முறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள சேலம் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

15/3/19

பெறுநர்

1. திரு. J. வேலாயுதம்,
28, போஸ் தெரு, ஒடத்துறை அஞ்சல்,
கவுந்தம்பாடி,
ஈரோடு மாவட்டம் 638 455.

2. ஆணையாளர்
   சேலம் மாநகராட்சி,
   சேலம்.

3. உதவி ஆணையர்,
   சூரமங்கலம் வார்டு அலுவலகம்,
   சேலம் மாநகராட்சி.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு **3**
**இ. கோ. / உதரி**